**துணை ஆணையர்(மாவ), அம்பத்தூர் சரகம், அவர்களின் செயல்முறை ஆணை**
**முன்னிலை செல்வி. ரு. தானுப்ரியா,**
**இடம் ஒருங்கிணைந்த வணிகவரிகள் மற்றும் பதிவுத்துறை வளாகம்,**
**7வது தளம், அண்ணா சாலை, நந்தனம்,சென்னை-35.**

OFFICE OF THE ASSISTANT COMMISSIONER (ST) PADI ASSESSMENT CIRCLE
24 JAN 2024

---

ந.க. 2327/2023/அ1

நாள்- 19.01.2024

பொருள் : பொதுப்பணிகள் - தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் - தொகுதி-IV - நேரடி நியமனம் - தமிழ்நாடு அமைச்சுப் பணி - வணிகவரித்துறை - காஞ்சிபுரம் கோட்டம் - துணை ஆணையர்(மாவ), அம்பத்தூர் சரகம் இளநிலை உதவியாளர்கள் - பணிவரன்முறை செய்து ஆணையிடல்- தொடர்பாக.

பார்வை : 1. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் அவர்களின் கடித எண்.1928/PSD-D2/2023, நாள்.04.09.2023.
2. இணை ஆணையர் (மாவ), காஞ்சிபுரம் கோட்டம் அவர்களின் நக.7521/2023/அ2, நாள். 29.09.2023.

''''''''''''''''''''

**ஆணை :**

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால், தொகுதி-IV தேர்வு நடந்த நாள் 24.07.2022 மூலம் இளநிலை உதவியாளராக தேர்வு செய்யப்பட்டு பார்வை 2ல் காணும் இணை ஆணையர் (மாவ), காஞ்சிபுரம் கோட்டம் அவர்களின் ஆணையின் வாயிலாக இச்சரகத்திற்குட்பட்ட அலுவலகங்களின் பணியமர்த்தப்பட்ட பின்வரும் இளநிலை உதவியாளர்களுக்கு அவரவர் பெயர்களுக்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள நாளிலிருந்து இளநிலை உதவியாளர்கள் பணி நிலையில் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது..

பணிவரன்முறை செய்யப்பட்ட நாளில் இருந்து மூன்றாண்டுகளுக்குட்பட்ட தொடர்ச்சியான ஈராண்டு காலம் தகுதி காண் பருவ காலமாக நிர்ணமிக்கப்படுகிறது. இக்காலத்தில் தனியாளர் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் தேர்வில் தேர்ச்சி பெறவேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது.

| வ. எண் | பெயர் | அலுவலகம் | பணியில் சேர்ந்த நாள் |
|---|---|---|---|
| 1 | நா. லோகேஸ்வரி | உதவி ஆணையர்(மாவ), அம்பத்தூர் வரிவிதிப்பு வட்டம். | 03.10.2023 மு.ப. |
| 2 | செ. சரவணன் | உதவி ஆணையர்(மாவ), பாடி வரிவிதிப்பு வட்டம் | 04.10.2023 மு.ப |
| 3 | கே. யுவராஜ் | உதவி ஆணையர்(மாவ), நொளம்பூர் வரிவிதிப்பு வட்டம் | 06.11.2023 மு.ப. |

இந்த பணிவரன்முறை ஆணையானது தொகுதி -IV தேர்வு தொடர்பாக சென்னை உயர்நீதி மன்றம் மற்றும் சென்னை உயர் நீதி மன்றத்தின் மதுரை கிளையில் நிலுவையில் உள்ள நீதிப்பேராணை மனுக்களின் மீதான தீர்ப்பினைப் பொறுத்து மாறுதலுக்குட்பட்டது.

ஒம்/- ரு.தானுப்ரியா
துணை ஆணையர் (மாவ),
அம்பத்தூர் சரகம்.

பெறுநர் .

தனியாளர்கள்

1. உதவி ஆணையர்(மாவ), பாடி வரிவிதிப்பு வட்டம்
2. உதவி ஆணையர்(மாவ), அம்பத்தூர் வரிவிதிப்பு வட்டம்
3. உதவி ஆணையர்(மாவ), நொளம்பூர் வரிவிதிப்பு வட்டம்

(உரிய வழி மூலமாக)

நகல் - இணை ஆணையர் (வவ), காஞ்சிபுரம் கோட்டம் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

//உண்மை நகல்//

மேலாளர் 19/1/24

19/01/24